

புருனோ என்னும் பூனைக்கு அதனுடைய நண்பர்களின் யோசனைகள் பிடிக்கவில்லை. அது மற்றவர்களுடன் சேர்ந்து சிறந்த விருந்து ஒன்றுக்கு ஏற்பாடு செய்யக் கற்றுக்கொள்ளுமா?

Marshall Cavendish Education

Ministry of Education
SINGAPORE

ISBN 978-981-012-810-4
9 789810 128104

HO / MOOF
விருந்தோ விருந்து
MINISTRY OF EDUCATION

# விருந்தோ விருந்து

மூலக்கதை
HO LEE-LING

ஓவியர்
MOOF



# விருந்தோ விருந்து

## இந்தப் புத்தகத்தை எவ்வாறு பயன்படுத்தலாம்?

மாணவர்களைப் பாராட்டுதல் அவர்களை வாழ்நாள் கல்விக்கு ஆயத்தப்படுத்துகிறது.

பாராட்டும் மனப்பான்மை கொண்ட பிள்ளைகள் தனித்தன்மைகள் கொண்டு திகழ்வர்.
அவர்கள் **மற்றவரை மதிப்பர்; அவர்கள் கருத்துகளுக்கு மதிப்புக்கொடுப்பர்; பிறரிடமிருந்தும் கற்றுக்கொள்வர்.**

கதையில் வரும் முக்கியக் கதாபாத்திரம் புருனோ, கதையின் இறுதியில் தன் நண்பர்கள் கூறும் நல்ல பயனுள்ள கருத்துகள் மூலம் தானும் கற்றுக்கொள்ளலாம் என்பதை உணர்ந்துகொண்டது. மற்றப் பூனைகளும் புருனோவிடம் உள்ள தனித்தன்மைமிக்க பாடும் திறனைப் போற்றக் கற்றுக்கொண்டன. பிறர் கருத்துகளை மதித்துப் பூனைகள் ஒன்றிணைந்து செயற்பட்டதால் விருந்து சிறப்பாக அமைந்தது.

நீங்கள் இந்தக் கதையைப் பிள்ளைகளிடம் படித்துக் காட்டும்போது பிள்ளைகள் மற்றவரிடமுள்ள தனித்தன்மைகளை அடையாளம் கண்டுகொள்ளவும் அவற்றை மதிக்கவும் வேண்டும் என்பதை வலியுறுத்தலாம். சில பரிந்துரைகள் பின்வருமாறு:

### பிள்ளைகள் மற்றவரிடமுள்ள தனித்தன்மையை அடையாளம் கண்டு உணர்ந்து பாராட்டும் திறனை வளர்த்துகொள்ளப் பின்வரும் கேள்விகளைக் கேட்கவும்:

- தொடக்கத்தில் புருனோவுக்குத் தன் நண்பர்கள் கூறிய யோசனைகள் பிடிக்கவில்லை. அதனால் அது தனியாக ஒரு விருந்தை ஏற்பாடு செய்தது. மற்றப் பூனைகள் ஏற்பாடு செய்த விருந்தோடு ஒப்பிடும்போது புருனோ ஏற்பாடு செய்த விருந்து எவ்வாறு வேறுபட்டிருந்தது? (காண்க: பக்கம் 11-14)
- புருனோ ஏன் வருத்தப்பட்டது என்று நீ நினைக்கிறாய்? மற்றப் பூனைகளிடமிருந்து அது என்ன கற்றுக்கொண்டது?
- புருனோவின் நண்பர்கள் அதை விருந்துக்கு அழைத்தன. புருனோவின் யோசனையை அவை மதித்தன என்பதையும் காட்டின. இதை நீ எவ்வாறு அறிவாய்? விருந்துகளிலேயே மிகச் சிறந்த விருந்தாக அது அமைந்தது என்று நீ ஏன் நினைக்கிறாய்?



# விருந்தோ விருந்து

மூலக்கதை: **Ho Lee-Ling**
ஓவியர்: **Moof**



Ministry of Education
SINGAPORE

முன்னொரு காலத்தில், நான்கு பூனைகள் தியோங் பாரு வட்டாரத்தில் வாழ்ந்து வந்தன.




中峇鲁市场 TIONG BAHRU MARKET




ஒரு நாள் அவை ஒரு பூனைக்குட்டியைப் பார்த்தன.
எல்லாப் பூனைகளுக்கும் அதை மிகவும் பிடித்துவிட்டது.
அதற்கு அவை ‘கிட்டி’ என்று பெயர் வைத்தன.




“கிட்டியை வரவேற்க நாம் விருந்து வைக்கலாமா?”
என்று கரும் பழுப்பு நிறப்பூனை, புருனோ சொன்னது.



“நான் நெத்திலி மீன் கொண்டு வரவா?” என்றது டிங்கி.
“நான் பலூன் கொண்டு வரவா?” என்றது டிம்மி.



“நான் பலூன்களைக் கட்ட நூல் கொண்டு வரவா?”
என்றது டோனி.



“ம்ம்ம்... நல்ல யோசனை!” என்றன பூனைகள்.
ஆனால், புருனோவுக்கு மட்டும் அது பிடிக்கவில்லை.




“இல்லை! இல்லை! இந்த யோசனை எனக்குப் பிடிக்கவில்லை.
நான் கிட்டிக்குத் தனியாக விருந்து வைத்துக்கொள்கிறேன்,”
என்றது புருனோ.



மறுநாள் பூனைகள் விருந்துக்குத் தயார் செய்தன.





அவை தங்கள் வீட்டை அலங்கரித்தன.


KiTTY
PARTY
NILO

அவை உணவும் விளையாட்டுப் பொருள்களும் கொண்டு வந்தன.




Meow
eow


Meow

கிட்டி முதலில் புருனோ ஏற்பாடு செய்திருந்த விருந்துக்குப் போனது.



பிறகு, அது மற்றப் பூனைகள் ஏற்பாடு செய்திருந்த விருந்துக்குப் போனது.




KiTTY



புருனோ மட்டும் தனியாக இருந்தது.
பூனைகளுக்கு அதைப் பார்க்கப் பாவமாக இருந்தது.



“நீயும் எங்கள் விருந்தில் கலந்துகொள்,” என்றது டோனி.



புருனோ தன் தவற்றை உணர்ந்தது. “நீங்கள் ஏற்பாடு செய்திருக்கும் இந்த விருந்து மிகவும் சிறப்பாக இருக்கிறது,” என்றது புருனோ.



“உன்னாலும் இது போன்ற விருந்தை ஏற்பாடு செய்ய முடியும்,” என்றன பூனைகள். புருனோ மகிழ்ந்து பாடியது. பூனைகள் அதைப் பாராட்டின.





பூனைகள் எல்லாம் ‘விருந்தோ விருந்து’ என்று
கொண்டாடி மகிழ்ந்தன.

## எழுத்தாளரைப்பற்றி

Lee-Ling சிங்கப்பூர் எழுத்தாளரும் வரலாற்றாசிரியரும் ஆவார். அவர் டிவா, பிரின்ஸ்டன் என்னும் இரு பூனைகளுடன் வசிக்கிறார். அவற்றுக்கு நெத்திலிமீனைத் தின்னவும் அட்டைப் பெட்டிகளுடன் விளையாடவும் விருப்பம். அவருக்குத் தியோங் பாருவின் கட்டடக்கலையும் அவ்விடத்தின் பழமையும் மிகவும் பிடிக்கும். அதுமட்டுமன்றி, அவ்வட்டாரத்தில் சுற்றித் திரியும் தெருப்பூனைகளையும் அவருக்குப் பிடிக்கும்.

## ஓவியரைப்பற்றி

Mike Foo (Moof) சிங்கப்பூரில் வளர்ந்த ஓர் ஓவியர். அவர் விளையாட்டுப் பொருள்கள் செய்பவராகவும், புத்தகக் கடை விற்பனையாளராகவும் இருந்தார். அவர் ஓவியங்கள் வரைவதிலும் வண்ணம் தீட்டுவதிலும் ஈடுபடாதபோது படப் புத்தகங்களை வாசிப்பார். அவர் அடிக்கடி தம்முடைய செல்லப் பிராணியான நாய்க்குட்டி ஸ்கோட்டியை மகிழ்விப்பார். அதற்குக் கயிற்றைக்கொண்டு விளையாடவும் பூனையைப்போல் சீறவும் பிடிக்கும்.

**Acknowledgements**
We would like to express our appreciation to the following parties for their contribution and assistance in making this publication possible:
- Mdm Mubarak Begum w/o Mohamed Siddiqe of Jamiyah Kindergarten, and Mdm Arunhachelam Shanthi, Mdm Pandiyaraja Ramathilagam and Mdm Sujatha Pragatheeswaran of Ramakrishna Mission Sarada Kindergarten; and
- Curriculum Planning and Development Division, MOE.

**© 2014, Ministry of Education**
**Republic of Singapore**

**Published by Marshall Cavendish Education**
*An imprint of Marshall Cavendish International (Singapore) Private Limited*
Times Centre, 1 New Industrial Road, Singapore 536196
Customer Service Hotline: (65) 6213 9444
E-mail: tmesales@sg.marshallcavendish.com
Website: www.marshallcavendish.com/education

Marshall Cavendish is a trademark of Times Publishing Limited.

First published 2014

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval systerm, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying or otherwise, without prior permission of the copyright holder.

ISBN 978-981-01-2810-4

Printed in Singapore by Times Printers, www.timesprinters.com

Designed by Orgnix Creatives